Registered as a Newspaper

பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 29

திங்கட்கிழமை
25 டிசெம்பர் 2023

மார்கழி 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"அப்ப ஆமிப் பாதுகாப்போட இலங்கையில பாலன் பிறக்கப் போறார் எண்டுங்கோ"

கிறிஸ்மஸ், புத்தாண்டை முன்னிட்டு

# தேவாலயங்களுக்கு கடும் பாதுகாப்பு

## பொலிஸாருடன், இராணுவமும் களமிறக்கம்

**கொழும்பு, டிசெம்பர் 25**

**கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டை முன்னிட்டு நாட்டிலுள்ள அனைத்துத் தேவாலயங்களுக்கும் கடும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.**

11

## நத்தாருக்காக பொதுமன்னிப்பு

கொழும்பு, டிசெ. 25

நத்தார் பண்டிகையை முன்னிட்டு தெரிவு செய்யப்பட்ட கைதிகளுக்கு விசேட பொது மன்னிப்பு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

11



யாழ்ப்பாணம் மரியன்னை தேவாலயத்தில் நேற்று நள்ளிரவு இடம்பெற்ற கிறிஸ்மஸ் ஆராதனையின்போது...

பொலிஸ் வேட்டையில்

## முல்லையில் 250 பேர் ஒருவாரத்தில் கைது

### அவர்களில் 25 பேர் புனர்வாழ்வுக்கு

முல்லைத்தீவு, டிசெ. 25

முல்லைத்தீவு மாவட்டத்தில் பத்து பொலிஸ் நிலையப் பிரிவுகளிலும் கடந்த 17ஆம் திகதி முதல் நேற்று வரையான ஏழு நாட்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கைகளில் உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனையாளர்கள் 113 பேர் உள்ளடங்கலாக 250

11



வாசகர்கள், விளம்பரதாரர்கள், முகவர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் உதயனின் நத்தார் வாழ்த்துக்கள்.

## டெங்கால் பாதிக்கப்பட்ட பல்கலை. மாணவி சாவு!

### ஊசி ஒவ்வாமை காரணமா?



யாழ்ப்பாணம், டிசெ. 25

டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார். மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவரும், யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறை நான்காம் வருட மாணவியுமான குணரத்தினம் சுபீனா

11

குழந்தை இருதய சத்திரசிகிச்சை நிபுணர்

## வடக்கில் எவருமில்லை!

யாழ்ப்பாணம், டிசெ. 25

வடக்கில் குழந்தை இருதய சத்திரசிகிச்சை நிபுணர் பதவி வெற்றிடமாகியுள்ளது.

இதுவரை காலமும் யாழ். போதனா மருத்துவமனையில் கடமையாற்றிய குழந்தை இருதய சத்திர சிகிச்சை நிபுணர் காலி மாவட்டத்துக்கு மாற்றலாகிச் சென்றுள்ளார். அந்த வெற்றிடத்துக்கு எவரும் நிரப்பப்படவில்லை.

11

இந்த வருடத்தில் மட்டும்

## வீதி விபத்துகளால் 2,163 பேர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 25

இந்த ஆண்டில் 21 ஆயிரத்து 953 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளதுடன், அந்த விபத்துகளில் 2 ஆயிரத்து 163 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் பணிப்பாளர் மூத்த

11

இலங்கைக்கு எதிரான மகளிர் கிரிக்கெட்:

## இங்கிலாந்து அணியில் யாழ்ப்பாணப் பெண்



கொழும்பு, டிசெ. 25

யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட தமிழ்ப் பெண்ணான அம்ருதா சுரேன் குமார் இங்கிலாந்து 19 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் கிரிக்கெட் அணியில் இடம் பிடித்துள்ளார்.

இவரின் தந்தை சுரேன்குமார் சென். ஜோன்ஸ்

11

## யாழ்ப்பாணம் சிறையில் கைதிகளிடையே மோதல்

யாழ்ப்பாணம், டிசெ. 25

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இரு கைதிகளுக்கு இடையே ஏற்பட்ட கைகலப்பில் கைதி ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைகளுக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

11

வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில்

## திருட வந்தோரை தீண்டியது பாம்பு

### அம்மனின் அதிசயம் பக்தர்கள் மெய்சிலிர்ப்பு

முல்லைத்தீவு, டிசெ. 25

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் திருட முற்பட்டவர்கள் பாம்புத் தீண்டலுக்கு இலக்கானதால், திருடும் முயற்சியைக் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குக்கு கடத்தப்படவிருந்த 10 கோடி ரூபா 'ஐஸ்' சிக்கியது

## தமிழக பொலிஸார் தீவிர விசாரணை

**சென்னை, டிசெ.25**

**இந்தியாவின் மணிப்பூரிலிருந்து சென்னை வழியாக இலங்கையின் தலைமன்னாருக்குக் கடத்தி வரப்படவிருந்த சுமார் 10 கோடி ரூபா பெறுமதியான 67 கிலோ கிராம் 'ஐஸ்' போதைப்பொருளுடன் இருவர் நேற்றுமுன்தினம் தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

கைதுசெய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் எனக் கூறப்படுகிறது. போதைப்பொருள் மியான்மரில் இருந்து மணிப்பூருக்கு எல்லை வழியாகக் கடத்திக் கொண்டுவரப்பட்டது என்று சந்தேகநபர்கள் பொலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளனர். கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களிடம் தமிழகப் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என தமிழக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)

## பொலிஸ் வேட்டை இடைநிறுத்தம்

கொழும்பு, டிசெ. 25

நாடுதழுவிய ரீதியில் போதைப்பொருள் ஒழிப்புக்கு எதிராக முன்னெடுக்கப்படும் 'யுக்திய' பொலிஸ் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவா இதனைத் தெரிவித்தார்.

"நத்தார் பண்டிகை மற்றும் விடுமுறை தினத்தையொட்டியே இந்த நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்படுகிறது.


24, 25,26 ஆகிய தினங்களில் இந்தச் சோதனை நடவடிக்கை இடம்பெறாது. அதன்பின்பு மீண்டும் ஆரம்பிக்கப்படும் " என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## இளைஞருக்கு மறியல்

யாழ்ப்பாணம், டிசெ.25

ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சித்தன்கேணியில் கைதுசெய்யப்பட்ட இளைஞரை எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைத்தது மல்லாகம் நீதிமன்று. சந்தேகநபரிடம் இருந்து 56 மில்லிகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டது. (எ-125)



## 7 நாள்களில் 13,666 பேர் கைது

கொழும்பு, டிசெ.25

நாடளாவிய ரீதியில் போதைப் பொருள் பாவனை மற்றும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் 'யுக்திய' நடவடிக்கையின் முதற்கட்டமாக கடந்த ஏழு நாள்களில் 13 ஆயிரத்து 666 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 717 சந்தேகநபர்கள் தடுப்பில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. அதேவேளை, நேற்று அதி காலைவரையில் நிறைவடைந்த 24 மணித்தியால 'யுக்திய சுற்றிவளைப்பு' நடவடிக்கையின் மூலம் ஆயிரத்து 534 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-44)

## கசிப்புடன் பலர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.25

ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்புடன் இளைஞர் ஒருவரை பலாலி பொலிஸார் கடந்த வியாழக்கிழமை கைது செய்தனர் என்று பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த ஒருவரே உடைமையில் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

\+ + + +

பலாலியில் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புலனாய்வுத் தகவலுக்கமைய புன்னாலைக்கட்டுவன் பகுதியில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்றும், 750 மில்லிலீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ரி-125)

\+ + + +

கிளிநொச்சி, டிசெ.25

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமாரசாமிபுரத்தில் கசிப்புக் காய்ச்சிய குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து 45 லீற்றர் கசிப்பு, 2 லீற்றர் கோடா, 11 பியர் ரின்கள் என்பன மீட்கப்பட்டன என்று தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்தார். (எ-113)

## உடைமையில் கஞ்சா இளைஞர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 25

அளவெட்டிப் பகுதியில் கஞ்சாவுடன் இளைஞர் ஒருவரைப் பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. சந்தேகநபரிடமிருந்து 30 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ரி-125)



## தண்ணீர்த் தொட்டிக்குள் கசிப்புக் காய்ச்சிய கில்லாடி

### பொலிஸார் முறியடிப்பு; சந்தேகநபர் கைது

கிளிநொச்சி, டிசெ. 25

கிளிநொச்சி, விசுவமடு - கொழுந்துபுலவு பகுதியிலுள்ள வீடொன்றில் பின்புறமாகவுள்ள தண்ணீர்த் தொட்டியை சூட்சுமமாக கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தியவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தருமபுரம் பொலிஸார் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையிலேயே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து 34 போத்தல்களில் கசிப்பு மற்றும் 712 போத்தல்களில் கசிப்புக் காய்ச்சப் பயன்படுத்தப்படும் கோடா என்பன மீட்கப்பட்டன என்று தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம். சதுரங்க தெரிவித்தார். (ச-13)

## போதைமாத்திரை ஒருவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், டிசெ.25

வறுத்தலைவிளானில் போதை மாத்திரைகள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர் எதிர்வரும் முதலாம் திகதி முதல் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் இருந்து 10 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ-125)

## இளைஞர்கள் மூவர் கந்தகாட்டுக்கு

யாழ்ப்பாணம், டிசெ.25

கடந்த ஒருவார காலத்தில் இளவாலையில் இருந்து மூவர் கந்தகாடு மறுவாழ்வு மையத்துக்கு நீதிமன்ற அனுமதியுடன் அனுப்பப்பட்டுள்ளனர்.

காட்டுப்புலம், மாதகல், இளவாலை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே மறுவாழ்வு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் இருவர் ஹெரோயினுக்கு அடிமையானவர்கள் என்று இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

## அச்சுவேலியில் போதைத்தடுப்பு வேட்டை!

மோப்பநாய் சகிதம் போதைப்பொருள் ஒழிப்பு தேடுதல் நடவடிக்கை அச்சுவேலிப் பகுதியில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையில் சந்தை, வியாபார நிலையங்கள் மற்றும் வெற்றிலை, பாக்கு விற்பனை நிலையங்கள் என்பன சோதனைக்குட்படுத்தப்பட்டன. இதில் சந்தேகநபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிகாட்டுவான் வீதியை சீரமைக்கக் கோரிக்கை!

**யாழ்ப்பாணம், டிசெ. 25**

**யாழ்ப்பாணத்திலிருந்து குறிகாட்டுவான் செல்லும் வீதி பல இடங்களில் மிகவும் மோசமாகச் சேதமடைந்து காணப்படுவதால் பொதுமக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணத்திலிருந்து தீவகத்துக்குச் செல்லும் வீதியில் அராலிச்சந்தியிலிருந்து குறிகாட்டுவான் செல்லும் வீதிப் பகுதியே இவ்வாறு பயணிப்பதற்கு ஒவ்வானதாகக் காணப்படுகின்றது.
பலநூறு பக்தர்கள் நயினாதீவுக்குச் செல்வதற்குப் பயன்படுத்தும் வீதியாகவும் இது காணப்படுகின்றது. எனவே வீதியின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு இதைச் சீரமைப்பதற்கு அதிகாரிகள் உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-9)


# வெங்காயம் தட்டுப்பாடு!

வெங்காயத்தின் விலை சடுதியாக அதிகரித்துள்ள நிலையில் யாழ்.சந்தைகளில் வெங்காயத்துக்கு பற்றாக்குறை நிலவுகிறது என்று நுகர்வோர் கவலை தெரிவித்துள்ளனர்.
பெரிய வெங்காயம் கிலோ 600ரூபா வரையிலும் சின்ன வெங்காயம் கிலோ 500 ரூபா வரையிலும் விற்பனையாகின்றது. இந்த விலை அதிகரிப்பு காரணமாக சந்தைகளுக்கு வெங்காயத்தின் வரத்து குறைவடைந்துள்ளதால் அதற்குத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (ச-17)

# மாத்தறைச் சிறைச்சாலையில் மேலும் பலருக்குக் காய்ச்சல்!

கொழும்பு, டிசெ.25

மாத்தறைச் சிறையில் பரவிவரும் காய்ச்சல் காரணமாக மேலும் 8 சிறைக்கைதிகள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
ஏற்கனவே 8 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் இரவு மேலும் 8 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் காமினி பி.திஸாநாயக்க தெரிவித்தார்.
மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள இருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. சிறைச்சாலையில் பரவும் காய்ச்சல் மூளைக்காய்ச்சலாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. (எ-இ)



# இரணைமடு வான்கதவு திறப்பு!

வன்னேரிக்குளம், டிசெ. 25

கிளிநொச்சி, இரணைமடுக் குளத்தின் வான்கதவுகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. குளத்தின் நீர் மட்டம் 35 அடி 9 அங்குலமாக உயர்வடைந்ததையடுத்தே குளத்தின் வான்கதவுகள் நேற்று மீண்டும் திறக்கப்பட்டன.
வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால், கண்டாவளை கிராம அலுவலர் பிரிவில் உள்ள மக்களை அவதானமாக இருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. கால்நடைகளை வெள்ள இடரில் இருந்து பாதுகாக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-13)

# நாடாளுமன்ற ஊழியர்களுக்கு பஸ் பயணச்சலுகை 'கட்'

கொழும்பு, டிசெ.25

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையைக் கருத்திற் கொண்டு நாடாளுமன்றத்தின் அதிகப்படியான செலவினங்களை மட்டுப்படுத்த திறைசேரி தீர்மானித்துள்ளது.
பேருந்துகளில் இலவச பயணத்துக்காக நாடாளுமன்ற ஊழியர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த (பஸ் பாஸ்) பயணச்சலுகை அடுத்த வருடம் முதல் இரத்துச் செய்யப்படவுள்ளது.
பேருந்து அனுமதிப்பத்திரத்துக்காக வருடாந்தம் எட்டு கோடி ரூபாவை அரசாங்கம் ஒதுக்க வேண்டியுள்ளது .நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைக்கு ஏற்ப அது கட்டுப்படியாகாது என்பதால், அந்தத் தொகையை அடுத்த ஆண்டிலிருந்து ஒதுக்க முடியாது என நாடாளுமன்றத்துக்கு திறைசேரி அறிவித்துள்ளது. (எ-இ)

## அரச சேவையாளர்களின் விடுமுறை குறைப்பு?

கொழும்பு, டிசெ. 25

நாட்டில் சேவையில் ஈடுபடும் அரச ஊழியர்களுக்கான விடுமுறைகளைக் குறைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
வருடமொன்றுக்கு 42 ஆகவுள்ள சாதாரண மற்றும் ஓய்வு விடுமுறையின் எண்ணிக்கையை 25 நாள்களாகக் குறைக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கான சட்டவிதிகளை மறுசீரமைக்க ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் ஏ.ஜகத், டி.டயஸ், திறந்த மற்றும் பொறுப்புவாய்ந்த அரசாங்கம் தொடர்பான துறைசார் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவித்துள்ளார். அதேவேளை அரச ஊழியர்களின் சாதாரண விடுமுறை நாள்களை 10 ஆகவும், ஓய்வு விடுமுறை நாள்களை 15 நாள்களாகவும் குறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதினம் தெரியுமோ?

**பள்ளிக்கூடங்களுக்கு ஒரு மாதம் லீவு. அதால இப்ப எல்லா இடமும் ரூர் சீசன் தொடங்கிட்டுது. இஞ்சாலிப் பக்கம் உள்ளவை கொழும்பு, கண்டி, நுவரெலியா எண்டு போக, அங்கையிருக்கிறவை நயினாதீவு, நல்லூர், நிலாவரை, மாதகல் ,இரணைமடு எண்டு மாறி மாறி படையெடுத்தபடி இருக்கினம். யாழ்ப்பாணத்துக்கு வாற சிங்கள ஆக்கள் கட்டாயம் போற இடம் நயினாதீவு. அங்க போய் வந்தாத்தான் அவையின்ர யாழ்ப்பாணப் பயணம் பத்தியப்படும். அவை மட்டுமில்லாமல் தமிழ் ஆக்களும் இந்த லீவுக்குள்ள நயினாதீவுக்கு வாறது கூட. அதால இப்ப குறிகாட்டுவானில கடும் சனநெருக்கடி. மழை எண்டாலும் சனங்கள் நயினாதீவுக்குப் போறதைக் குறைக்கவேயில்லை. இப்பிடிப்பட்ட நிலையில அங்க வாற சுற்றுலாப் பயணிகளைச் சிலர் பேய்க்காட்டி, காசு உழைக்கிற அலுவலையும் வடிவாப் பாக்கினம்.**

**தூர இடத்தில இருந்து வாகனத்தில வாறவை, குறிகாட்டுவானிலதான் அதுகளை விட்டிட்டு படகில நயினாதீவுக்குப் போகோணும். அப்பிடி வாகனத்தை விட்டுப்போட்டு, நயினாதீவுக்குப் போய் வந்து, திரும்ப வாகனத்தை எடுத்தால், திடீரெண்டு ரண்டு, மூண்டு பேர் முன்னுக்கு வந்து நிப்பினம். அண்ணை, வாகனப் பாதுகாப்புக்கு முந்நூறு ரூபா தாங்கோ எண்டு ஏதோ குடுத்து வைச்ச காசைக் கேக்கிறமாரி உரிமையோட கேப்பினம். இதில சும்மா விட்டிட்டுப் போன வாகனத்துக்கு முந்நூறு ரூபாவோ? போகேக்க அப்பிடி ஆரும் சொல்லேலையே? சரி, ரிக்கெற்றைத் தாங்கோ காசைத்தாறம் எண்டு சொன்னால் அவைக்கு கோபம் வந்திடும்.**

**ரிக்கெற்றெல்லாம் தர ஏலாது. வாகனத்தை விட்டுட்டு இப்ப காசைக் கேட்டால் சண்டித்தனம் காட்டுறியளோ? பொறுங்கோ உங்களுக்குப் பொலிஸைக் கூட்டியாறம் எண்டு அங்கால நிக்கிற பொலிஸ்காரரிட்ட போய் ஏதோ சொல்லுவினம். பொலிஸ்காரர் நீதியா நடப்பார் எண்டு வாகனத்தில வந்தவை நினைப்பினம். ஆனால் பொலிஸ்காரரும் அவையோட கூட்டு. சண்டை பிடிக்காமல் காசை குடுத்திட்டு போங்க எண்டு அதட்டுற மாதிரி பொலிஸ்காரர் ஓர்டர் போடுவார். சரி எதுக்கு வீண் சோலி?-எண்டு இவையளும் 300 ரூபாவை எடுத்து நீட்டுவினம். அங்கதான் இருக்கு -ருவிஸ்ட் . கேட்ட உடன தந்திருந்தால் முந்நூறு ரூபா ஓகே. இப்ப பொலிஸ் வந்ததால அவருக்கும் குடுக்கோணும். அறுநூறு ரூபா தந்தால் தான் வாகனத்தை எடுக்க விடுவம் எண்டு றாங்கியாச் சொல்லுவினம். இனியும் வாய்வைச்சால் கொஞ்சநேரத்துல 1200 ரூபாவைக் கட்டவேண்டி வந்திடுமோ எண்ட பயத்தில, அழாக்குறையா அறுநூறு ரூபாவைத் தண்டத்துக்குக் கட்டிப்போட்டு எல்லாரும் போகினமாம்.**

**இதில என்ன பகிடியெண்டால், இப்பிடி வாகனத்துக்கு 300 ரூபா அறவிடச் சொல்லி பிரதேசசபையோ, பிரதேச செயலகமோ ஆரையும் குறிகாட்டுவானில விடேலை எண்டு சொல்லுகினமாம். அப்பிடியெண்டால் ஆரோ இப்பிடி வாகனப் பாதுகாப்பு எண்டு சனத்தை ஏமாத்தி காசு பறிக்கினம்போல. கொஞ்சம் இந்த விசயத்தை உரிய ஆக்கள் கவனத்தில எடுக்கிறது நல்லது. இல்லாட்டி வெளி இடங்களில இருந்து இஞ்சவாறவை - யாழ்ப்பாணத்தார் ஏமாத்திக் காசு பறிப்பாங்கள் எண்ட நினைப்போட போகக்கூடும். அதைஇல்லாமல் செய்ய வேண்டியது, குறிகாட்டுவானுக்குப் பொறுப்பானவையின்ர கடமை. அதைச் செய்வினமா?**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை கரையோரத்தில் அழிக்கப்படும் சவுக்கு!

முல்லைத்தீவு, டிசெ. 25

முல்லைத்தீவு கடற்கரைகளில் நடப்பட்டிருந்த சவுக்குமரங்கள் அண்மைக்காலமாக விறகுக்காகவும், தற்போது கிறிஸ்மஸ் அலங்காரங்களுக்காகவும் வகைதொகையின்றி அழிக்கப்படுகின்றன என்று பொது மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

2004ஆம் ஆண்டு சுனாமிப் பேரலை இடரையடுத்து, முல்லைத்தீவு கடற்கரைகளில் சவுக்கு மரங்களை நட்டுப் பராமரிப்பது என்று முடிவெடுக்கப்பட்டது.

எதிர்பார்க்கப்பட்ட - திட்டமிடப்பட்ட அளவுக்கு சவுக்கு மரங்கள் நடப்படவில்லை.

ஆனால், ஒப்பீட்டளவில் சவுக்கு மரங்களின் இருப்பு சற்று உயர்வாகவே பேணப்பட்டது.

இந்த நிலையிலேயே முல்லைத்தீவுக் கடற்கரையிலுள்ள சவுக்கு மரங்கள் அண்மைக்காலமாக சட்டவிரோதமாக அழிக்கப்பட்டு வருகின்றன. அதிகாரிகள் இதுதொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-13)



## கச்சாய் தெற்கு துறைமுக இணைப்பு வீதியை சீரமைக்க மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 25

கச்சாய் தெற்கு துறைமுக இணைப்பு வீதியை சீரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் சாவகச்சேரி பிரதேசசபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சாவகச்சேரி பிரதேசசபைக்குட்பட்ட கொடிகாமம் - கச்சாய் தெற்கு துறைமுக இணைப்பு வீதி (வீதி - 1) கடந்த பல வருடங்களாக எந்த விதமான புனரமைப்புமின்றி காணப்படுகின்றது.

மழைக்காலத்தில் சேறும் சகதியுமாக வும், வெயில் காலத்தில் மணற் கும்பிகளாக வும் காணப்படும் இந்த வீதியை சீரமைத்து போக்குவரத்துக்கு உரிய அதிகாரிகள் வழியேற்படுத்த வேண்டும் என்று மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-159)


## ஆசிரியர்களுக்கு பயிற்சி

யாழ்ப்பாணம், டிசெ. 25

இலங்கையில் அங்கீகரிக்கப்படாத வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று பாடசாலை ஆசிரியர்களாகவிருப்போர் இதுவரை ஆசிரியர் பயிற்சி பெறவில்லையாயின் அவர் களுக்குப் பயிற்சியளிக்க சந்தர்ப்பம் வழங்கப்படும் என்று கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அறிவித்துள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையுடன் தொடர்பு கொண்டு அனுமதியைப் பெறலாம்.

அனுமதி வழங்குவது குறித்த முடிவை கல்வி அமைச்சு வழங்கும் என்று கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் ச.லலீசன் தெரிவித்துள்ளார். (ச-66)




## வியாபார நிலையங்களில் அதிகாரிகள் திடீர்ச் சோதனை

யாழ்ப்பாணம், டிசெ.25

யாழ். மாவட்டச் செயலகத்தின் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் உத்தியோகத்தர்களால் யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் உள்ள பல வியாபார மையங்களில் கடந்த வாரம் திடீர்ச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் நிறுத்தல் கருவிகள் சோதனைக்குட்படுத்தப்பட்டன. அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினரால் அங்கீகரிக்கப்படாத மற்றும் நடப்பாண்டில் முத்திரை பதிக்கப்படாத நிறுக்கும் கருவிகளைப் பயன்படுத்திய வியாபாரிகள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (ரி-20.26)

## மலையக மக்களின் பங்களிப்பு போராட்டத்தில் அளப்பரியது

### சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ.25

தேசிய விடுதலைப்போராட்டம் தமிழ் மண்ணில் நடைபெற்ற போதெல்லாம் அது வடக்கு, கிழக்கில் மையங்கொண்டிருந்தாலும் மலையகத்தில் இருந்த தன்னெழுச்சியான இளைஞர், யுவதிகள் அந்த மண்ணிலே வந்து போராடிய வரலாறை, அவர்கள் செய்த தியாகங்களை இந்த இடத்தில் பொறுப்புடன் பதிவு செய்கின்றேன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் தெரிவித்தார்.

'200 இல் மலையகம் மாற்றத்தை நோக்கி' எனும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழர் தோற்றுபோன இனமல்ல. இந்த உலகில் வாழ முடியாத இனமும் அல்ல. வரலாறு எம்மை சரியான பாதையில் அழைத்துச்செல்கின்றது- என்றார். (எ-44)

## சுற்றுலாதினக் கட்டுரைப் போட்டி வவு.வடக்கு மாணவர்கள் சாதிப்பு

வவுனியா, டிசெ. 25

உலக சுற்றுலாதினத்தை முன்னிட்டு வவுனியா சுற்றுலாப் பணியகம் நடத்திய கட்டுரைப்போட்டியில், வவுனியா மாவட்டத்துக்குரிய முதல் மூன்று இடங்களையும், வவுனியா வடக்கு வலய மாணவர்கள் பெற்றுள்ளனர்.

வவுனியா, நெடுங்கேணி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த முகிந்தன் றிபீன்சா, வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியின் மாணவிகளான சத்தியசீலன் லவண்றிக்கா, இந்திரன் தீனாள் ஆகியோரே முறையே முதல் மூன்று இடங்களையும் பிடித்துள்ளனர். (ம-75)

## தொழில்நுட்ப வளர்ச்சியால் வாசிப்புத்திறன் மழுங்கடிப்பு

### சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.25

வாசிப்பு என்பது ஒரு சிறந்த அனுபவத்தையும் மூளையிலே பல்வேறு தூண்டல்களையும் ஆரோக்கியமான துறைகளையும் வளர்க்கிறது. ஆனால், தற்போது மாறிவரும் தொழில்நுட்ப வளர்ச்சியில் பல்வேறு தளங்களிலே இலகுவாகக் கிடைக்கும் விடயங்களால் வாசிப்புத்திறன் நுனிப்புல் மேய்வதாக அமைகிறது.

- இவ்வாறு மிருசுவில் றோ.க.த.க. பாடசாலையில் இடம்பெற்ற தேசிய வாசிப்பு மாத நிகழ்வில் உரையாற்றுகையில் பூநகரி மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தெரிவித்தார்.

"பெற்றோரே, உங்கள் பிள்ளைகளுக்கு புத்தகங்களை வாசிப்பதற்கான நேரத்தை ஒதுக்குங்கள். களத்தை ஒதுக்கிக்கொடுங்கள். வாசிக்கத் தூண்டுங்கள். உலகம் வாசிப்பவர்களுக்கே சொந்தமாகிறது" என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஏழ்மை—அன்பு—பகிர்தல்

இன்று நத்தார் பெருவிழா. பண்டிகைகளையும் கொண்டாட்டங்களையும் பெரிதாகக் கண்டுகொள்ளாமல் – சம்பிரதாயபூர்வ நாளாகக் கடந்துபோகும் வெற்று மனோநிலைக்குத் தமிழர் தாயகம் தள்ளப்பட்டு ஒன்றரைத் தசாப்தங்கள் கடந்துவிட்டன. இந்த நீண்ட நெடிய காத்திருப்புக் கலாசாரத்தின் மற்றொரு அம்சாகவே இன்றைய பாலன் பிறப்புப் பண்டிகை அமைந்திருக்கின்றது என்றால், அந்தக்கூற்று விவாதப்பொருளாக இருக்கப் போவதிலை.

இயேசு கிறிஸ்து பிறந்தபோது பெத்லகேம் நகரில் ஒரு விடிவெள்ளி தோன்றியது. அது 'மனுக்குலத்தை மீட்கும் இரட்சகரின் பிறப்புக்கான சான்று' என்று முன்னறிவிக்கப்பட்டதால், அந்த விடிவெள்ளியை தமது விடியலாகவும் – மீட்பின் சின்னமாகவும் முன்னோர்கள் கண்டுகொண்டனர். அறிஞர்களும்– வேதஞானிகளும் ஆர்ப்பரித்தனர். இதே தளத்தில்தான் தமிழர்களாகிய நாமும் இன்றையநாளை எதிர்கொள்கின்றோம். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரம்; அரசியல் கைதிகளின் விடுதலை, சிங்கள – பௌத்தத் திணிப்புகள், காணி ஆக்கிரமிப்பு என்று எங்கும் எம்மைச்சுற்றி நீடிக்கும் இருண்மை நிலையில் இருந்து தமிழினம் விடுபடுவதற்கு இம்முறையாவது ஒரு விடியல் கிட்டாதா என்பதுதான் தமிழர் தாயகத்தின் தற்போதைய பெருவிருப்பு.

நீண்டகாலமாகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை மீண்டும் கிடப்பில் போடப்பட்டுள்ளது, இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காக கடந்தவருடம் ரணில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட எத்தனங்கள் இருந்த இடம் தெரியாமல் போயுள்ளன, காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் 'உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு' என்ற பெயரில் கபடநாடகம் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது, பௌத்த- சிங்கள பேரினவாதத்தின் நிலவிழுங்கல் செயற்பாடுகள் விஸ்வரூபம் பெற்றுள்ளன. இவ்வாறானதொரு பின்னணியில் 'மீட்பின் ஒளி' தமிழர்களுக்கும் இன்று தேவைப்படுவது தவிர்க்க முடியாததாகின்றது. இதேவேளை- இந்தப் பாலன் பிறப்பை இன்னொரு தளத்தில் இருந்து சிந்திக்க வேண்டியவர்களாகவும் நாமிருக்கின்றோம். இறைமகனான இயேசு கிறிஸ்து இவ்வுலகுக்குத் தம்மை வெளிப்படுத்தியவிதம் முழுவதும் வேறுபட்டது என்பதுடன் அது முழுக்கமுழுக்க அவரின் தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்துகின்றது. இயேசுகிறிஸ்து நினைத்திருந்தால் மாடமாளிகைகளிலும் கூடகோபுரங்களிலும் பிறந்திருக்கலாம். பல்லாயிரம் வானதூதர்கள் புடைசூழ ஓர் இராஜனைப்போன்று அவர் மண்ணுலகில் அவதரித்திருக்கலாம். ஆனால், அவர் தேடிக்கொண்டது ஒரு மாட்டுத்தொழுவம். ஆடு, மாடுகளுக்கு உணவளிக்கும் தீவனத்தொட்டியில்தான் அவர் வந்துதித்தார். பிறப்பில் ஏழ்மையையும், வாழ்வில் அன்பையும் பகிர்தலையும்தான் இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தினார். இயேசுகிறிஸ்து கற்பித்துச்சென்ற 'ஏழ்மை, அன்பு, பகிர்தல்' இம்மூன்றையும் இன்று கட்டாயமாகப் பிரதிபலிக்க வேண்டியவர்களாக இலங்கையர்களாகிய நாம் இருக்கின்றோம்.

இலங்கையின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழ்ந்துகிடக்கின்றது. எத்தனையோ குடும்பங்கள் ஒருவேளை உணவுக்கே அல்லற்பட்டுக் கொண்டிருக்கின்றன. புத்தாண்டுடன் 'பிறக்கப்போகும்' வரிகள் நிலைமையை இன்னும் மோசமாக்கப்போகின்றன. இவ்வாறானதொரு ஏழ்மையைச் சூடிக்கொண்டு இல்லாதோருடன் பகிர்ந்துகொள்ள வேண்டிய தவிர்க்க முடியாத்தனத்தில் நாம் ஒவ்வொருவரும் இருக்கின்றோம். அதுதான், இறைவல்லமையுள்ளவர் பிறக்க விரும்பிய அந்தத் தீவனத் தொட்டிக்குச் செல்லும் உண்மையான அழைப்பாகும். வாழ்வதற்குப் போராடிக் கொண்டிருக்கும் ஏழைகளில் இயேசுவைத் தேடுவதுதான் அர்த்தமுள்ள நத்தாராகவும் அமையும். 'ஏழ்மை -அன்பு -பகிர்தல்' இம்மூன்றின் பாற்பட்டு எவரெல்லாம் நத்தாரைக் கொண்டாடுகின்றார்களோ அவரெல்லாம் இன்னொரு இயேசுவே.



# பெரமுன பங்காளிகளை வளைக்க ரணில் வியூகம்

கொழும்பு, டிசெ.25

**சிறிங்கா பொதுஜன பெரமுனக் கட்சியுடன் கூட்டணி வைத்துள்ள சிறு கட்சிகளை வளைத்துபோடுவதற்கான முயற்சியில் ரணில் விக்கிரமசிங்க இறங்கியுள்ளார் எனத் தெரியவருகின்றது.**

இதற்கான பேச்சுகள் ஏற்கனவே ஆரம்பித்திருந்தாலும், ஜனவரி மாதம் சிறு கட்சிகளுடன் ஜனாதிபதி நேரில் பேச்சு நடத்தவுள்ளார் என அறியமுடிகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்காமல், தமது கட்சி சார்பில் வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்கான ஏற்பாடுகளை மொட்டுக்கட்சி செய்துவரும்சூழ்நிலையிலேயே மொட்டுக் கூட்டணியிலுள்ள சிறு கட்சிகளை வளைத்துபோடுவதற்கான வியூகத்தை ஜனாதிபதி ஆரம்பித்துள்ளார் என்று கூறப்படுகின்றது. (எ-44)

## வயதான ஜனாதிபதியை விரும்பாத இளைஞர்கள்!

*கூறுகிறது ஐக்கிய மக்கள் சக்தி*

கொழும்பு, டிசெ.25

வயது முதிர்ந்த அரசியல்வாதிகள் ஜனாதிபதி பதவிக்கு வருவதை இளைஞர்கள் விரும்பவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தம்மிக்க பெரேரா என்பதை உறுதிப்படுத்தியுள்ளது. அதனால் சிறிலங்கா பொதுஜன பெரமுனவில் ரணிலுக்கு இடமில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார். (எ-இ)

## டலஸுக்கு அமைப்பாளர் பதவி

சஜித் பிரேமதாஸ தலைமையில் உருவாகும் புதிய கூட்டணியில் டலஸ் அழகப்பெருமவுக்கு தேசிய அமைப்பாளர் பதவியை வழங்குவது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி பரிசீலித்துவருகின்றது என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. (எ-44)

## தேசிய மக்கள் சக்தி வெல்வதற்கு சாத்தியம்

கொழும்பு, டிசெ.25

2024 ஆம் ஆண்டு நடத்தப்படும் எந்த தேசிய தேர்தலாக இருந்தாலும் தேசிய மக்கள் சக்தி அமோக வெற்றியை பெறும் என விசேட புலனாய்வு அறிக்கை மூலம் ஜனாதிபதியிடம் விரிவான விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று தெரியவருகிறது.

கடந்த ஒன்றரை வருட காலத்துக்குள் தேசிய மக்கள் சக்தியின் செல்வாக்கு அதிகரித்துள்ளது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.

நாட்டின் கிராமங்களில் இதற்கு முன்னர் ஏனைய பிரதான கட்சிகளுக்கு ஆதரவளித்து வந்த பலர் தற்போது தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளனர் என்று புலனாய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)

## கைதிகளைச் சந்திக்கலாம்

கொழும்பு, டிசெ. 25

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டை முன்னிட்டு நேற்றும் இன்றும் சிறைக்கைதிகளை உறவினர்கள் சந்திப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலை கட்டுப்பாட்டுப் பிரிவின் ஆணையாளர் காமினி பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ச-இ)

## நாளை

26.12.2023

**செவ்வாய்க்கிழமை**

**மார்கழி 10**

சுபநேரம் : 10.57 - 12.27

ராகுகாலம் : 03.27 -04.57

பூரணை விரதம்

## நாளொரு நல்வார்த்தை

**ஒரு சிந்தனை நம்மை நெருப்பை விட அதிக சூடாக்கிவிடுகிறது.**

**- ஹென்றி வாட்ஸ்வொர்த் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்



**வாக்கியப் பஞ்சாங்கப்படி சனிபகவான் டிசெம்பர் 20 ஆம் திகதி மகர ராசியில் இருந்து கும்ப ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார். 20.12.2023 முதல் 6.3.2026 வரை கும்பராசியில் சஞ்சரிக்கவுள்ளார்.**




பணம், பதவி பார்த்து பழகாமல் அனைவரையும் ஒன்றுபோல நேசிக்கும் கன்னி ராசி அன்பர்களே...!

5 ஆம் வீட்டில் அமர்ந்து இதுவரை அனைத்து வேலைகளிலும் சிறுதடங்கலைக் கொடுத்து ஆட்டிவைத்த சனி பகவான் வரும் கடந்த 20 ஆம் திகதி முதல் 6 ஆம் இடமான கும்பத்தில் அமர்ந்து பலன் தர இருக்கிறார்.

இது ஒருவகையில் விபரீத ராஜயோக அமைப்பு என்று சொல்லலாம். இனி உங்கள் வாழ்க்கைத் தரம் உயரும். இதுவரை இருந்த தேக்க நிலைமை மாறும். தொல்லைகள் விலகும். கடன் பட்டுத் தவித்துக்கொண்டிருந்தவர்கள் வாழ்வில் ஏற்றம் பிறக்கும்.

கடன்களை அடைக்கும் அளவுக்குப் பணவரவு உண்டாகும். குடும்பத்தில் இருந்த சிறு சிறு பிரச்சினைகளும் முடிவுக்கு வரும். சேமிக்கும் அளவுக்குப் பணவரவை சனிபகவான் கொடுப்பார்.

பக்குவமாகப் பேசி பலவகைகளிலும் காரியங்களைச் சாதிப்பீர்கள். உடலும் மனமும் தெம்பு அடையும். நெடு நாள்களாக விடுபட்ட குலதெய்வப் பிரார்த்தனைகள் நிறைவேறும். பிள்ளைகள் இனி உங்களைத் தேடி வருவார்கள். உங்கள் மனம்போல் நடந்துகொண்டு மகிழ்ச்சி தருவார்கள்.

ஆரோக்கியத்தில் இருந்த உபாதைகள் நீங்கும். ஆரோக்கியம் மேம்படும். தாய்வழி உறவினர்களுடன் இருந்த மனக்கசப்பு நீங்கும். பூர்வீக சொத்து கைக்கு வரும். நாடாளுபவர்கள் அறிமுகமாவார்கள்.

**சனிபகவானின் பார்வைப் பலன்கள்**

சனிபகவான் உங்களின் ராசிக்கு 3, 8, 12 ஆகிய வீடுகளைப் பார்க்கிறார். எனவே முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். கௌரவம் கூடும். உணவு விடயத்தில் அக்கறை அவசியம். பயணத்தின்போது உரிய கவனம் தேவை. வராது என்று நினைத்திருந்த பணம் கைக்குவரும். உறவினர், நண்பர்கள் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். எங்கும் முதல் மரியாதை கிடைக்கும்.

**வியாபாரம்:** அதிரடி இலாபம் கிடைக்கும். நிலுவையில் இருந்த தொகை வசூலாகும். மக்களைக் கவரும் வகையில் கவர்ச்சிகரமான விளம்பரம் செய்வீர்கள். கூட்டுத் தொழிலில் இருந்த பிரச்சினைகள் தீரும். வேலையாள்கள் உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு கொடுப்பார்கள்.

**உத்தியோகம்:** பணி இடங்களில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். நல்ல சம்பளத்துடன் புதிய வேலை கிடைக்கும். பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். அதிகாரிகள் நல்ல முறையில் நடத்துவார்கள். சக ஊழியர்களுடன் இருந்த மோதல் போக்கு விலகும்.

**மொத்தத்தில் இந்த சனிப்பெயர்ச்சி வாழ்வில் பல அதிர்ஷ்ட வாய்ப்புகளை அள்ளி வழங்கி வெற்றிகளைக் குவிக்கச் செய்யும். சமூகத்தில் பேரும் புகழும் கூடும்.**

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அழகும் இளமையும் கூடும். பழைய பிரச்சினைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். விரும்பிய பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**இடபம்:** எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலைகள் வந்து போகும். நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப் போய் பொல்லாப்பாக முடியும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். விமர்சிக்க வேண்டாம். கவனம் தேவைப்படும் நாள்.

**மிதுனம்:** அநாவசிய செலவுகளைக் குறைக்கப் பாருங்கள். திடீர்ப் பயணங்கள் இருக்கும். சின்னச் சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். சகோதரர்களால் பகை வரக்கூடும்.

**கடகம்:** குடும்பத்தாரின் ஒத்துழைப்பு இருக்கும். சொத்து வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். ஆதாயம் பெருகும். அனுகூலம் உண்டு. புது வேலை அமையும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள்.

**சிம்மம்:** தவறு செய்பவர்களைத் தட்டிக் கேட்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வளர்ச்சிக்குச் சாதகமாக இருப்பார்கள். வியாபாரத்தில் புது முடிவுகள் எடுப்பீர்கள். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**கன்னி:** புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயற்படுவார்கள். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**துலாம்:** வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். வியாபாரத்தில் தாமதம் ஏற்படும். தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள்.

**விருச்சிகம்:** பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. விலை உயர்ந்தப் பொருள்கள் வாங்குவீர்கள். தாயார் ஆதரித்துப் பேசுவார். பயணங்கள் சிறப்பாக அமையும். வியாபாரம் தளைக்கும்.

**தனுசு:** குடும்பத்தினருடன் மனம் விட்டுப் பேசி மகிழ்வீர்கள். விருந்தினர்களின் வருகையால் வீடு களைக்கட்டும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். நீண்டநாள்களாகத் தள்ளிப்போன காரியங்கள் முடியும். இலாபம் உண்டு.

**மகரம்:** வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உறவினர்களில் உண்மையானவர்களைக் கண்டறிவீர்கள். அநாவசியச் செலவுகளைக் கட்டுப்படுத்துவீர்கள். வீட்டாரின் ஆதரவு பெருகும். கனவு நனவாகும் நாள்.

**கும்பம்:** திட்டவட்டமாகச் செயற்பட்டு காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். மனஸ்தாபம்வந்து நீங்கும். பணப்பற்றாக்குறையைச் சமாளிப்பீர்கள். மனதுக்கு இதமான செய்தி வரும். சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**மீனம்:** உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துகொள்வார்கள். அரசால் ஆதாயம் உண்டு. வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும்.

# ஹெரோய்னுடன் சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.25

பகிரங்கபிடியாணை பிறப்பிக்கப்பட்ட கொலைச் சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் கோப்பாய்ப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள கொலைக் குற்றச்சாட்டுத் தொடர்பில் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட சந்தேகநபர் நீதிமன்ற வழக்குகளுக்குச் செல்லாது தலைமறைவான நிலையில் நீதிமன்றம் பகிரங்கப் பிடியாணை பிறப்பித்திருந்தது.

இதையடுத்து உரும்பிராயைச் சேர்ந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து 10 கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் யாழ். நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (எ-125)



# போண்டாமணி மறைந்தார்

சென்னை, டிசெ. 25

தமிழ் சினிமாவின் பிரபல நகைச்சுவை நடிகர் போண்டாமணி நேற்று ஞாயிற்றுக்கிழமை உடல் நலக்குறைவால் உயிரிழந்தார்.

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட இவர் 1991 ஆம் ஆண்டு வெளியான நடிகர் பாக்யராஜின் 'பவுனு பவுனுதான்' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானார்.

தொடர்ந்து ஏராளமான திரைப்படங்களில் அவர் நடித்து ரசிகர்களைக் கவர்ந்தார்.

'சுந்தரா டிராவல்ஸ்', 'மருதமலை', 'வின்னர்', 'வேலாயுதம்', 'ஜில்லா' உள்ளிட்ட 150க்கும் அதிகமான திரைப்படங்களில் நடித்துள்ளார். குறிப்பாக நடிகர் வடிவேலுவுடன் சேர்ந்து நடித்த அவரது காட்சிகள் அனைவரையும் ஈர்த்தவை. நடிகர் போண்டாமணியின் மறைவையடுத்து தமிழ்த் திரையுலகப் பிரபலங்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

இம்மாதம் 16 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை

# இந்தியன் செலக்ஷனின்

## நத்தார் மற்றும் புதுவருட ஜவுளிப் பண்டிகை

ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தலைசிறந்த ஆடைகள்

பட்டுச் சாறிகள்,
கொட்டன் சாறிகள்,
சல்வார்கள், சல்வார் துணிகள், டொப், பாட்டி புரொக், சேட்,
ரீ சேட், சோட்ஸ் மற்றும் சிறுவர்களுக்கான ஆடைகள்



## விஷேட விலைக்கழிவு

ரெடிமேட் சல்வார் 750 /=

டொப் 500/=

கையிருப்பு உள்ளவரை மட்டுமே

காலம்: 16.12.2023 முதல் 31 ஆம் திகதி வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்




உ

ஓம் சிவமுருகா
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

பருத்தித்துறை, மருதடி, குருமணல்

## அருள்மிகு கந்தசுவாமி கோவில்

பரிபாலன சபை

PARUTHTHTHITHURAI, MARUTHADY, KURUMANAL
ARULMIHU KANTHASWAMY KOVIL
PARIPALANA SABAI

Reg. No. HA/5/JA/891

## கூறு விலை கோரல்

மேற்படி ஆலயத்திற்கு முருகப் பெருமானின் திருவருளால் இராசகோபுரம் அமைப்பதற்கு உத்தேசித்துள்ளோம். அதனால் ஏற்கனவே கால் புறாய் வரையும் அமைக்கப்பட்டுள்ள தளத்தின்மேல் ஐந்து தள இராசகோபுரம் அமைப்பதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது. சிறந்த சிற்பாசாரியார்கள் தங்கள் கூறு விலையையும், தாங்கள் முன்செய்த வேலை விபரங்களையும் ஏழு நாட்களுக்குள் அறியத் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்

த.ஜெயவர்த்தனராசா
தலைவர்,
077 819 2336

சி.குருபரன்
செயலாளர்,
077 597 0999

ந.தேவராசா
பொருளாளர்,
077 291 5759

மின் அஞ்சல்
kurukobi@gmail.com

தொடர்புகொள்ளும் விலாசம்:

ந.தேவராசா
விஸ்வகுல வீதி, புலோலி வடக்கு, பருத்தித்துறை.

## மரண அறிவித்தல்

மலர்வு
20 . 05 . 1939



உதிர்வு
23 . 12 . 2023

### திருமதி நவமலர் கணபதிப்பிள்ளை

சாயி இல்லம், இமையாணன் மேற்கு உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவமலர் கணபதிப்பிள்ளை நேற்றுமுன்தினம் (23-12-2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஓய்வுபெற்ற பிரதம எழுதுனர் தம்பையா கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசதுரை யோக்கியம் தம்பதியரின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற தம்பையா மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், யோகதர்சினி (நோர்வே), கருணைரூபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், உதயகுமார், மாலதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் திலக்சன், அபிசன், ஆதித்தியன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.12.2023) திங்கட்கிழமையும், நாளை (26.12.2023) செவ்வாய்க்கிழமையும் அஞ்சலிக்காக சாயி இல்லம், இமையாணன் மேற்கு உடுப்பிட்டியில் வைக்கப்பட்டு, நாளைமறுதினம் (27.12.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் வல்லை இந்து பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
குடும்பத்தினர்.
மகன்: 076 232 5279
மகள்: 077 471 0814

சாயி இல்லம்,
உடுப்பிட்டி.

(cs53262) N-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
03 - 01 - 1939



மறைவு
21 - 12 - 2023

### கதிரவேலு இரத்தினம்

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், கெருடாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு இரத்தினம் அவர்கள் கடந்த (21.12.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் வள்ளியம்மை தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற கதிரவேலு (தர்மகர்த்தா கெருடாவில் கோட்டை சீமா முத்துமாரியம்மன்) வின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கார்த்திகேசு இலட்சுமி, கந்தப்பு ஆகியோரின் அன்புச் சகோதரியும், இரத்திரராசா, கம்சா, அகிலன், காமினி ஆகியோரின் அன்புத் தாயாரும், கசிந்தா, வசிகரன், ரஜனி, ஜெபநாதன், ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சனுஜா, ரேபிக்கா, அக்சயன், விபூசா, கிசானி, நாவினி, சுருதிகா, சயீனா, தேஜஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.12.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணியளவில் காட்டுப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்


கெருடாவில்

(CS 53276)(K-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 08 - 10 - 1961 | 25 - 12 - 2016 |



## அமரர் வல்லி சிதம்பரநாதன்

பாசத்தின் உறைவிடமே பண்பின் ஒளிவிளக்கே
உற்றவர் சுற்றமும் கூடிக்கழித்த உறவுகளை
கைவிட்டுச் சென்றதேனோ பிரிவால் வாடி நிற்கின்ற உள்ளங்கள்
தேற்றமொழியின்றி தவிக்கிறதே - நின் உறவின்
அடிதேடித் துடிக்கிறதே

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்**

27/15, றக்கா வீதி,
கச்சேரி, யாழ்ப்பாணம்.

சிதம்பரநாதன்
குடும்பத்தினர்.

(CS 27466) S-1

# களவுபோன கைபேசிகளை உரியவர்கள் பெறலாம்

யாழ்ப்பாணம், டிசெ.25

போதைப்பொருள் கட்டுப்பாட்டு விசேட நடவடிக்கையில் கைதுசெய்யப்பட்ட ஹெரோய்ன் வியாபாரிகளிடமிருந்து 19 கைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றைப் பறிகொடுத்து முறைப்பாடு செய்தவர்கள் தொடர்புகொள்ளுங்கள் என்று நெல்லியடி பொலிஸார் அறிவித்துள்ளனர்.

நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துன்னாலை - குடவத்தைப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையிலேயே அவை மீட்கப்பட்டன. கைபேசி திருட்டு தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்தோர் தமது கைபேசிகளை உறுதிப்படுத்திப் பெற்றுக்கொள்ளலாம் என்று பொலிஸார் கேட்டுள்ளனர். (ச-100)

# கால்நடை திருட்டு: மக்கள் முறியடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 25

கொட்டும் மழையை சாதகமாகப் பயன்படுத்தி கால்நடைகளைத் திருட மேற்கொள்ளப்பட்ட முயற்சி மக்களால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கோப்பாய் வடக்கில் நடந்துள்ளது. கொட்டும் மழையில் திருடர்கள் மாட்டை களவாட முயற்சித்தபோது ஊர்மக்கள் விழித்தமையால் திருட்டு முயற்சியை கைவிட்டு அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை- கோப்பாய், நீர்வேலி பிரதேசங்களில் கால்நடைத் திருட்டு அதிகரித்துள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர். (ச-17)

## மணமகள் தேவை

யாழ். இந்து (P) 1993 மகம் இரண்டாம் பாதம் கிரகபாவம் 4 உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு: 077 659 0606

## விசேட வகுப்பு

**தரம் 1 தொடக்கம் 5 வரையான**
மாணவர்களுக்கு தத்தம் பொருத்தமான இடத்தில் வந்து கற்பிக்கப்படும். விசேட புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்களும் வினாத்தாள் வகுப்பும் குழுவாகவும் தனியாகவும் கற்பிக்கப்படும்.

தொடர்புக்கு: ஆசிரியர் (NDT)
076 155 4532, 077 245 7867

## கரைத்துறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு.

# கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்கு சொந்தமான கடைகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான பகிரங்க மீள் கேள்வி மனுக்கோரல் அறிவித்தல்

முல்லைத்தீவு மத்திய பேருந்து நிலைய வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்கு சொந்தமான 01 தொடக்கம் 08 மற்றும் 11 தொடக்கம் 13 வரையான 11 எண்ணிக்கையான கடைகள் வட மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்போரிடமிருந்து நீண்டகால குத்தகையிடல் வாடகைக்கு விடுவதற்கான கேள்வி மனுப் பத்திரங்கள் 25.12.2023 ஆம் திகதி முதல் 16.01.2024 ஆம் திகதி வரையான 14 வேலை நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 2.00 மணி வரை கரைத்துறைப்பற்று பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் விநியோகிக்கப்படும். அத்தருணம் கேள்விகாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளித்து கேள்வி மனுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் தமது தேசிய அடையாள அட்டை, கிராம சேவகரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அத்துடன் குடும்ப அட்டை ஆகியவற்றின் மூலப்பிரதியையும் நிழற்படப்பிரதியையும் கொண்டுவருதல் வேண்டும். கேள்விமனு ஆனது 17.01.2024 அன்று மு.ப 10.00 மணிக்கு திறக்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியையும் இணைப்பிரதியையும் தனித்தனியாக செயலாளர் கரைத்துறைப்பற்று பிரதேச சபை முல்லைத்தீவு என்னும் முகவரியிட்டு கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் மூலப்பிரதி / இணைப்பிரதி என குறிப்பிடுவதுடன் "முல்லைத்தீவு மத்திய பேருந்து நிலைய கடை இல ......... என தெளிவாகக் குறிப்பிட்டு இரு விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறைகளையும் "**செயலாளர், கரைத்துறைப்பற்று பிரதேச சபை, தலைமை அலுவலகம், முல்லைத்தீவு**" என்ற முகவரிக்கு அரக்குமுத்திரையிட்டு இதற்கென தலைமை அலுவலகத்தில் செயலாளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 17.01.2024 அன்று மு.ப 10.00 மணிக்கு முன் இடுதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் 17.01.2024 அன்று முற்பகல் 10.00 மணிக்குப் பின்னர் பதிவுத்தபால் மூலம் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்விவைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் தாங்கள் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட கடிதத் திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் கேள்வித் தொகையின் முழுத்தொகையையும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும். மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செயலாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**கேள்வி அட்டவணை**

| கடை இலக்கம்/ விபரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|
| கடை இல 01 | ரூபா. 1,920,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 02 | ரூபா. 1,920,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 03 | ரூபா. 1,920,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 04 | ரூபா. 1,920,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 05 | ரூபா. 1,920,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 06 | ரூபா. 1,920,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 07 | ரூபா. 1,920,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 08 | ரூபா. 1,680,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 11 | ரூபா. 1,680,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 12 | ரூபா. 1,680,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 13 | ரூபா. 1,680,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |

**25.12.2023.**

**செயலாளர்,**
**கரைத்துறைப்பற்று பிரதேச சபை,**
**தலைமை அலுவலகம், முல்லைத்தீவு"**

(CR 41370)(k-1)

## வீடு வாடகைக்கு

மருதடி லேன் நல்லூரில் உள்ள நவீன வசதிகளுடன் கூடிய பாதுகாப்பான இரு மாடிகளையும் அனைத்து தளபாட வசதிகளையும் கொண்ட வீடு.
நீண்ட காலத்திற்கு வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள் நடத்துவதற்கு உகந்த இடம்.

வ.சுகுமார்
தொடர்பு : 076 881 2077
021 221 6099

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கப் பணியாளர்
**திரு. இரத்தினசிங்கம் டிலக்சன்**
அவர்களின் அன்புத் தந்தையார்

### வைரமுத்து இரத்தினசிங்கம்

அவர்கள் கடந்த (21.12.2023) இல் இறைபதம் அடைந்ததையிட்டு அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

(CS 53275) (K-1)

# எலக்ரிக் பைக் (Electric Bike) விற்பனைக்கு

மொத்த விலையிலும், சில்லறை விலையிலும் விற்பனைக் குண்டு.



T.P.: 071 271 8833

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், டிசெ. 25

நவாலியில் உயிர்கொல்லி ஹெரோய்னுடன் கைதான பெண்ணொருவரை மல்லாகம் நீதிவான் இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதாக மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

உயிர்கொல்லி ஹெரோய்னை வீட்டில் வைத்திருப்பதாக மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய அங்கு சென்ற பொலிஸார் 2 கிராம் 824 மில்லிகிராம் உயிர்கொல்லி ஹெரோய்னை மீட்டதாகத் தெரிவித்தனர்.

இதனையடுத்து சந்தேகநபருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து சந்தேகநபரை முற்படுத்தியபோது இன்று திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (அ-ஒ-125)

# மன்னாரின் கழிவகற்றல் பிரச்சினைக்குத் தீர்வு

## புதிய மாவட்டச் செயலர் தெரிவிப்பு

மன்னார், டிசெ. 25

மன்னார் மாவட்டத்தில் கழிவகற்றல் மிகப் பெரியதொரு பிரச்சினையாக இருக்கிறது. இதற்குத் தீர்வு காண்பதற்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து முயற்சிப்பேன் என மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது இதனைத் தெரிவித்தார்.

'ஒவ்வொரு மாவட்டத்திலும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கு குழு இருக்கின்றது. அதில் மாவட்டச் செயலர் தலைவராகவும் ஏனைய திணைக்களங்களின் பிரதிநிதிகள் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரிகள் எல்லோரையும் இணைத்து அது செயற்படுகின்றது. அந்தக் குழுவின் பரிந்துரைக்கு அமைவாக மணல் அனுமதி வழங்கப்படும் என்றாலும் அதில் சுற்றுச்சூழல் பாதிப்புகளை கவனத்தில் கொண்டு மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்கும் தீர்மானங்களை எடுப்போம்' - என்றார். (அ-ஒ-213)

யாழுக்கு சுற்றுலா வந்தோரின்

# வாகனம் மோதி; ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 25

யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுலா சென்ற குழுவினரை ஏற்றிச்சென்ற வாகனம் வீதியைவிட்டு விலகி விபத்துக்குள்ளானதில் பேருந்து தரிப்பிடத்தில் காத்திருந்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 10 பேர் காயமடைந்துள்ளனர் என மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பஹாவில் வசிக்கும் ஒருகுழுவினர் சுற்றுலாவுக்காக யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தனர். அப்போது, அவர்கள் பயணித்த வாகனம் நேற்று அநுராதபுரம் - ரம்பேவ வெலிஓயா சந்திக்கு அருகில் வீதியை விட்டு விலகி பேருந்துக்காக காத்திருந்தவரை மோதித் தள்ளியது. இதில் ஒருவர் உயிரிழந்ததுடன் வாகனத்தில் பயணித்தவர்களும் காயமடைந்துள்ளனர். (அ-ஒ-இ)

# ஐஸுடன் கைது இளைஞருக்கு மறியல்

யாழ்ப்பாணம், டிசெ. 25

உயிர்கொல்லி ஐஸ் போதைப்பொருளுடன் கடந்த 21ஆம் திகதி கைதான உடுவில் இளைஞனை பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்ய மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியதாக சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

புலனாய்வுத் தகவலுக்கமைய உடுவில், மல்வம் சந்திப் பகுதியில் வைத்து 2 கிராம் 100 மில்லிகிராம் உயிர்கொல்லி ஐஸ் போதைப்பொருளுடன் கடந்த வியாழக்கிழமை இளைஞரை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்திய நிலையிலேயே, அவரை பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-125)

# குருதிக்குத் தட்டுப்பாடு


யாழ்ப்பாணம், டிசெ. 25

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை குருதி வங்கியில் 'ஓ பொசிட்டிவ்' குருதிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை குருதி வங்கியினர் தெரிவித்தனர்.

மேற்படி வகை குருதியை உடையவர்கள் தினமும் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பின் பக்கத்தில் அமைந்துள்ள 12 ஆம் இலக்க நுழைவாயிலின் ஊடாக மருத்துவமனையின் குருதி வங்கிப் பிரிவுக்கு நேரடியாக வருகை தந்து குருதியை வழங்க முடியும். 077 210 5375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டும் குருதியை வழங்க முடியும் எனவும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை குருதி வங்கியினர் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ஒ-66)


# மரண அறிவித்தல்

தோற்றம்
06 . 08 . 1998



மறைவு
23 . 12 . 2023

## குணரத்தினம் சுபீனா

**(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இறுதி ஆண்டு மாணவி)**

யாழ்ப்பாணம், சாயுடை மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் சுபீனா (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இறுதி ஆண்டு மாணவி) 23.12.2023 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் குணரத்தினம் தேவராணி தம்பதியினரின் செல்வப் புதல்வியும், டிலக்சனாவின் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) அன்புச் சகோதரியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2023) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மாவிட்டபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
076 720 4415

(CS 27468) S-1

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
05 . 05 . 1939



மறைவு
22 . 11 . 2023

கடந்த 22.11.2023 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த இணுவில் கந்தசுவாமி கோவில் ஸ்தாபகர் குழந்தையர் வேலாயுதர் வழித்தோன்றலும்
பரம்பரை ஆதின கர்த்தாவும் எமது குடும்பத்தலைவரும்

## அமரர் இராமுப்பிள்ளை ஆறுமுகம்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் கடந்த 23.12.2023 சனிக்கிழமை காலை 08.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (25.12.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் **தவிர்க்க முடியாத காரணங்களால் இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபை மண்டபத்திற்கு** (வடக்குவீதி) மாற்றப் பட்டுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இணுவில் மேற்கு, இணுவில்.** **குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடி நீங்க பாலன் பிறப்பு வழிகாட்டட்டும்

## மன்னார் ஆயர் கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் தெரிவிப்பு



மன்னார், டிசெ. 25

நாட்டின் பொருளாதார நெருக்கடி எம்மிடமிருந்து விலகி நாங்கள் அனைவரும் மகிழ்ச்சியோடும், திருப்தியோடும் வாழ இறைவன் எங்களுக்கு அருள வேண்டும் என கிறிஸ்து பிறப்பு வாழ்த்துச் செய்தியில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில்,

கிறிஸ்து பிறப்பு விழா என்பது இறை மகன் இயேசு இவ் உலகில் மனிதனாக கன்னிமரியாவுக்கு பிறந்த அந்த நாளை கொண்டாடும் ஒரு தினமாக உள்ளது. கிறிஸ்து இவ் உலகில் பிறந்து இறைவனால் இரக்கத்தையும், அன்பையும் இவ் உலகுக்குக் கொண்டு வந்தார். அதைப் போலவே இவ் உலகில் அமைதி நிலவ வேண்டும். நீதி இருக்கவேண்டும், உண்மைக்கு முதலிடம் கொடுக்கப்படவேண்டும் என்று ஆசித்தார்.

கிறிஸ்து பிறப்பு விழா எங்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான விழா. ஆயினும் இலங்கை மக்கள் பல வகையில் கஷ்டப்படுகிறார்கள்.

விலைவாசி கூடியிருக்கிற நிலையில் அவர்கள் வழமையாக வாங்கக்கூடிய பொருள்களைக் கூட வாங்க முடியாத நிலையில் அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். சில குடும்பங்கள் மூன்று வேளையும் சாப்பிட முடியாமல் ஒரு வேளை மாத்திரம் சாப்பிடுகின்றனர்.

எனவேதான் இறை இயேசுவின் வருகையால் மக்கள் இந்த நிலையில் இருந்து விடுபடவேண்டும். அவர்கள் இதையும் விட ஒரு நல்ல வாழ்வு வாழக்கூடியதாக வளம் பெறவேண்டும் என்று வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (ஒ-56)

# பிறந்திருக்கும் இயேசுபாலகன் தமிழர்களுக்கு விடிவு தரட்டும்!

## முன்னாள் எம்.பி. சரவணபவன் வாழ்த்து



யாழ்ப்பாணம், டிசெ. 25

பிறந்திருக்கும் இயேசுபாலகன் சுமுகமான சமூகச் சூழலில், அரசியல் பொருளாதார உறுதிப்பாடுகளுடன் தமிழ்ச் சமூகம் மீண்டெழ உதவவேண்டுமென்று நாம் பிரார்த்திப்போம் - இவ்வாறு தனது கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன்.

அவர் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இன்று உலகெங்கும் வாழும் கத்தோலிக்கர்கள் இயேசு கிறிஸ்துவின் பிறப்பைப் பெரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். எனினும் இலங்கைத் திருநாட்டில் வாழும் நாம் பல்வேறு சங்கடங்களுக்கும் சஞ்சலங்களுக்கும் மத்தியில் எதிர்கொண்டுள்ளமை மன வருத்தத்தைத் தருகின்றது.

இடர்பாடுகளையும், துன்பியல்களையும் பிறந்திருக்கும் பாலகன் இயேசு துடைத்தெறிந்து இலங்கைத் தீவு சகோதரத்துவம், சமத்துவம், சுபீட்சம் என்பனவற்றை இலக்காகக் கொண்டு பயணிக்கவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன். மீட்பராம் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு விழாவானது எம் துன்பியல்களில் இருந்து எம்மை மீட்டெடுக்கும் என்ற நம்பிக்கையுடன் பயணப்படுவோம் - என்றுள்ளது. (அ-ஒ-இ)

### தேவாலயங்களுக்கு...

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் வழிபாட்டின் போது தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன. இதனால், கிறிஸ்தவப் பெருநாள் கொண்டாட்டங்களின்போது தேவாலயங்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகின்றது.

'கிறிஸ்மஸ் காலத்தில் தேவாலயங்களுக்கு விசேட பாதுகாப்பை வழங்குவதற்கு ஏற்கனவே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தற்போதைய பாதுகாப்பு போதுமானதாக இல்லாவிட்டால், பொலிஸ் தலைமையகத்துக்கு அறிவிக்கமுடியும். பாதுகாப்புப் பிரச்சினைகள் உள்ள தேவாலயங்கள் 011 247 2757 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு தகவல்களை வழங்கமுடியும். சில தேவாலயங்களுக்குப் பொலிஸாருக்கு மேலதிகமாக இராணுவப் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது' என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், மூத்த பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார். (அ-ஒ-இ)

### திருட...

முல்லைத்தீவு மாவட்டத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் அதிசயமிக்கது. அந்த அம்மன் மிகவும் சக்தி வாய்ந்தது என்பது மக்களின் நம்பிக்கை. இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் திருடும் நோக்கத்துடன் மூன்று பேர் கதவை உடைத்துக் கொண்டு உட்செல்ல முயன்றுள்ளார்கள்.

கூரிய ஆயுதங்களுடன் ஆலயத்துக்குள் நுழைந்து, சி.சி.ரி.வி. இணைப்பை துண்டித்துவிட்டு அவர்கள் திருட முற்பட்டுள்ளார்கள். சி.சி.ரி.வி. இணைப்பைத் துண்டிப்பதற்காக அதன் இணைப்புப் பெட்டியினுள் கைவைத்தபோதே, அதற்குள்ளிருந்த பாம்பு திருடர்களில் ஒருவரைத் தீண்டியுள்ளது.

இதனையடுத்து திருட வந்தவர்கள், பாம்பு தீண்டலுக்கு இலக்கானவரைத் தூக்கிக் கொண்டு, அவசரமாக அங்கிருந்து சென்றுள்ளனர். இந்தச் சம்பவங்கள் அனைத்தும் சி.சி.ரி.வி.யில் பதிவாகியுள்ளது. இதனை அடிப்படையாக வைத்து முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் ஆலய நிர்வாகத்தினரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-ஒ-19)

### டெங்கால்...

(வயது - 25) என்பவரே உயிரிழந்துள்ளார்.

பல்கலைக்கழக விடுதியில் தங்கியிருந்த இவர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளார். பின்னர் வீட்டுக்குச் சென்றுள்ளார். அவருக்கு டெங்குத் தொற்று உறுதியானது. இதையடுத்து, தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் கடந்த 17ஆம் திகதி சேர்க்கப்பட்டார். அவர் தொடர்ந்து வாந்தியெடுத்ததால், அதைக் கட்டுப்படுத்த ஊசி மருந்து செலுத்தப்பட்டது. அந்த ஊசி மருந்து செலுத்தப்பட்டதும், அவரது உடல்நிலையில் அசாதாரண மாற்றம் ஏற்பட்டதையடுத்து, உடனடியாக அதி தீவிர சிகிச்சைக்கு மாற்றப்பட்டுள்ளார். 22ஆம் திகதி அவர் மயக்கமுற்ற நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் அவர் உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளைத் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

அவருக்குச் செலுத்தப்பட்ட மருந்தின் ஒவ்வாமையால் உயிரிழப்பு நேர்ந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. உடற்கூற்று மருத்துவப் பரிசோதனையில் உயிரிழப்புக்கான உறுதியான காரணம் குறிப்பிடப்படவில்லை என்பதுடன், கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மாதிரிகளின் பரிசோதனையின் பின்னரே சரியான விவரம் தெரியவரும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-26-66-125)

### இங்கிலாந்து...

கல்லூரியின் முன்னாள் கிரிக்கெட் வீரர். வடக்கின் பெரும் போர் இரு நாள் ஆட்டங்களாக நடைபெற்றபோது அவர் பெற்றுக்கொண்ட 145 ஓட்டங்கள் என்ற தனிநபர் சாதனை இன்னமும் முறியடிக்கப்படவில்லை. இந்த நிலையில் இங்கிலாந்து கழக அணிக்காக விளையாடி வரும் அம்ருதா, இங்கிலாந்து தேசிய மகளிர் அணியில் உள்வாங்கப்பட்டுள்ளார். இலங்கையில் அடுத்த ஆண்டு நடைபெறும் சுற்றுத் தொடரில் அவர் பங்கேற்கவுள்ளார். (அ-ஒ-இ)

### வடக்கில்...

இது குறித்து வடமாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளரும் யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளருமான மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தியை தொடர்பு கொண்டு கேட்டபோது; இதுவரை கடமையாற்றியவர் மாற்றலாகிச் சென்றுள்ளார். வெகுவிரைவில் மற்றுமொரு மருத்துவ நிபுணர் இடமாற்றம் மூலம் உள்வாங்கப்பட்டு நியமிக்கப்படுவார் - என்றார்.

இதேவேளை - அநுராதபுரத்தில் மேற்படி சிகிச்சைக்காக வடக்கிலிருந்து சிறுவர்கள் செல்கின்றமையால் அங்கும் நெருக்கடி நிலைமை தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-125)

### யாழ்ப்பாணம்...

சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாகச் சிறைச்சாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு கைதிகளுக்கு இடையே ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதிலேயே கைகலப்பு ஏற்பட்டது. சம்பவத்தில் 30 வயதான கைதி ஒருவரே காயமடைந்துள்ளார். (அ-ஒ-66)

### நத்தாருக்காக...

இதில் 989 ஆண்களும் 15 பெண்களும் அடங்குவர் என சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் காமினி பி. திஸாநாயக்க தெரிவித்தார். (அ-ஒ-இ)

### வீதி...

பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரணகல தெரிவித்துள்ளார். இந்த விபத்துகளில் 5 ஆயிரத்து 206 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும், காயமடைந்தவர்களில் பெரும்பாலானோர் நிரந்தரமாகவோ அல்லது பகுதியாகவோ ஊனமுற்றுள்ளார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ-ஒ-இ)

### முல்லையில்...

பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் 25 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கள்ளப்பாடு, தீர்த்தக்கரை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள கடற்கரைகளில் அமைக்கப்பட்டிருக்கின்ற வாடிகளில் விசேட சோதனை நடவடிக்கை நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்டது. உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனையாளர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்

இதேவேளை - கடந்த ஒருவாரம் நடத்திய தேடுதலில் 3 கிராம் ஹெரோய்ன், 480 கிராம் ஐஸ், ஒரு கிலோ 855 கிராம் 39 மில்லிக்கிராம் கேரள கஞ்சா, கஞ்சாச் செடி 5 மற்றும் 48 கிராம் வேறு வகையான போதைப் பொருள்கள், 443 லீற்றர் கசிப்பு, ஆயிரத்து 797 லீற்றர் கோடா உள்ளிட்டவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ-ஒ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பும் சகோதரத்துவமே நத்தாரை முழுமையாக்கும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வாழ்த்து

இயேசு கிறிஸ்து கொண்டுவந்த அன்பு, சகோதரத்துவம், ஏழைகளுக்கு உதவுதல் என்ற செய்தியில் வாழ்ந்தால் மட்டுமே நத்தார் மகிழ்ச்சி தரும்-இவ்வாறு தனது நத்தார் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

'அமைதியின் அரசர்' என்ற கௌரவப் பெயர் பெற்ற இயேசு கிறிஸ்துவின் அற்புதமான பிறப்பை நினைவுகூரும் நத்தார் தினம் இன்றாகும்.

தம்முடைய குமாரனை உலகுக்கு அனுப்பியதன் மூலம், தேவனுடைய ராஜ்ஜியத்தின் மதிப்புகள் பூமியில் மீண்டும் வாழ வேண்டும் என ஆண்டவர் எதிர்பார்த்தார். இருண்ட இதயங்களுக்கு கிறிஸ்து நித்திய ஒளியைக் கொண்டு வந்தார்.

பகிர்வு என்ற அற்புதமான பாடத்தை உலகுக்குக் கற்றுத் தந்த நத்தார் பண்டிகையை, கிறிஸ்தவர்கள் மட்டுமன்றி, இன, மத வேறுபாடின்றி உலக மக்கள் பலரும் கொண்டாடி வருகின்றனர்.

அன்பும், ஆதரவும், அமைதியும், சமாதானமும், சமத்துவமும் நிறைந்த உலகைப் படைக்க இயேசு தனது அன்பின் கரங்களை நீட்டி, துயரங்கள் நிறைந்த இதயங்களை அமைதிப்படுத்தினார்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, உலகளாவிய கிறிஸ்தவர்கள் டிசெம்பர் மாதத்தில் நத்தார் தினத்தை தேவாலய மணிகள் ஒலித்தும், இயேசுவின் பிறப்பை மெழுகுவர்த்தி வழிபாடுகளுடனும் கொண்டாடுகிறார்கள்.

இயேசு கிறிஸ்து கொண்டு வந்த அன்பு, சகோதரத்துவம், ஏழைகளுக்கு உதவுதல் என்ற செய்தியில் வாழ்ந்தால் மட்டுமே நத்தார் மகிழ்ச்சி தரும் -என்றுள்ளது. (ம)

# தாதியர் தங்குமிடத்தை சீரமைக்கக் கோரிக்கை

கிளிநொச்சி, டிசெ. 25

கிளிநொச்சி, தருமபுரம் மருத்துவமனையில் பணியாற்றும் தாதியர்கள், தாம் தங்கிநிற்கின்ற விடுதிக் கட்டடத்தைச் சீரமைத்துத் தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான மருத்துவமனைகளில் ஒன்றாக தருமபுரம் மருத்துவமனை காணப்படுகின்றது. இந்த மருத்துவமனையில் தங்கிப் பணியாற்றும் தாதியர்களுக்காக தங்குமிட வசதிகள் இன்மையால் அவர்கள் பழைய மருத்துவமனையின் கட்டடத்தையே தங்குமிட விடுதியாகப் பயன்படுத்தி வருகின்றனர். இந்தக் கட்டடத்தில் சுகாதாரச் சீர்கேட்டுக்கான ஏதுநிலைகள் இருப்பதாகவும், மழைகாலத்தில் தண்ணீர் உள்நுழையக்கூடிய வகையிலேயே கட்டடம் இருக்கின்றது என்றும் தாதியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

புதியதொரு கட்டடத்தை அமைக்க முடியாவிட்டாலும், தற்போது பயன்படுத்தும் கட்டடத்தை சீரமைத்தாவது தரவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ம-113)

**மாபெரும் கருத்தரங்கு**

வரலாறு
A/L 2023

வளவாளர்,
**M. பத்மன்**
[B.A(Hons)History, P.G.D.E, Dip.in.Psy, M.A (Hons) History, M.E.D (OUSL)]

இடம் : DMI (ஆரியகுளம், யாழ்ப்பாணம்)
காலம் : 26.12.2023 (செவ்வாய்க்கிழமை)
27.12.2023 (புதன்கிழமை)
நேரம் : மு.ப 8.00 - 12.00, பி.ப 1.00 - 4.00

இலங்கை வரலாறு இந்திய வரலாறு
ஐரோப்பிய வரலாறு நவீன உலக வரலாறு

தொடர்புகளுக்கு:- 077 482 5587

**காணி விற்பனைக்கு**

கோண்டாவில் நந்தாவில் அம்மன் கோவில் பின்புறமாக 3 3/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. இராசபாதை வீதி கரையில் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 882 8638

**வீடு வாடகைக்கு தேவை**

யாழ்நகர், திருநெல்வேலி, நல்லூர் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை. 076 189 8521

# வீதியில் விரிக்கப்பட்ட வலை: விபத்தில் முதியவர் காயம்!


யாழ்ப்பாணம், டிசெ. 25

வீதியில் உலர்வதற்காக விரிக்கப்பட்டிருந்த வலையில், சிக்குண்டு மோட்டார் சைக்கிளுடன் வீழ்ந்த முதியவர் காயமடைந்தார். தென்மராட்சி தெற்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கோவிலாக்கண்டி மற்றும் மறவன்புலவு கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் தங்களின் வலைகளைக் குறித்த வீதியில் உலர்வதற்காக விரிக்கின்றனர். இவ்வாறு விரிக்கப்பட்ட வலையில் சிக்குண்டு வீழ்ந்ததையடுத்தே அந்த முதியவருக்குக் காயம் ஏற்பட்டுள்ளது.

வீதிப் பகுதியில் வலைகளைக் காயவிட வேண்டாம் என்றும் இதனால் விபத்துகள் ஏற்படுவது அதிகரித்துள்ளது என்றும் தொடர்ச்சியாக அறிவுறுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

# மரணஅறிவித்தல்



தோற்றம் 03 - 07 - 1951

மறைவு 22 - 12 - 2023

## குமாரசாமி அருணகிரிநாதன்

யாழ். வருணனை பிறப்பிடமாகவும், சிவன் வீதி, ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி அருணகிரிநாதன் அவர்கள் கடந்த (22.12.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2023) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பின்னர் ஆவரங்கால் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன் வீதி,
ஆவரங்கால்.

தகவல்
குடும்பத்தினர்

(CR 41383)(K-1)

# மரக்கடத்தல்; சாரதி கைது

முல்லைத்தீவு, டிசெ.25

டிப்பர் வாகனத்தில் பாலைமரக் குற்றிகளைக் கடத்திய குற்றச்சாட்டில் புதுக்குடியிருப்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். டிப்பர் வாகனமும் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இந்தக் கைது நடவடிக்கை நடந்துள்ளது. புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் பகுதியில் இருந்தே மரக்குற்றிகள் கடத்தப்பட்டுள்ளன. 5 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய பாலை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர். (ரி-19)

**சிறிராம் ஜுவல்லர்ஸ்**

இல.158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஆண்டு இறுதியை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத் தள்ளுபடி



* செய்கூலி சேதாரமின்றி ஆபரணங்கள் வழங்கப்படும்.
* அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 01.01.2024 வரையும் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.

**ஒருமுறை வந்து பாருங்கள் ஒத்துக்கொள்வீர்கள்.**

* அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும்.
* தங்கத்தின் அன்றைய நாள் விலை நிலவரத்தின்படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.

தொடர்புக்கு: 077 165 1729, 077 773 0567, 021 222 8334



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.